**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **44**

| | | | |
|---|---|---|---|
| Name: | செல்வராஜ் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A11, A12, A15, A22 present. Others absent. Petition U/s 317crpc filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 13.04.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் மங்கம்மா சாலையில் குடியிருந்து வருகிறேன். தென்காசி கூலக்கடைபஜாரில் 12/303 சலுான் கடை தொழில் நடத்தி வருகிறேன். எனது அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அங்கு சென்றுவிட்டேன். இரண்டு தரப்பினருக்கிடையே சண்டை என்று கேள்விப்பட்டேன். அதன் பின்னர் 1 வாரம் கழித்து கடையை திறந்தேன். எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் 14.08.2007 ம் தேதி

..2..

மாதத்தின் இரண்டாவது செவ்வாய்கிழமை சலுான் கடைக்காரர்கள் சங்க கூட்டத்திற்கு நான் சென்றுவிட்டேன் அன்று கடையை திறக்கவில்லை. அன்று காலை 10.15 மணிக்கு கூலக்கடை பஜார் விளக்கில் இந்து முன்னணி காரர்களும், தமுமுக காரர்களும் மோதிக்கொண்டார்கள் என்றும் அதனால் அரிவாள் வெட்டு பட்டு இரண்டுதரப்பிலும் மூன்று மூன்று பேர் இறந்துவிட்டார்கள் என்றும் சிலர் வெட்டுக்காயம் பட்டதாகவும் சொன்னார்கள் என்று நான் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தென்காசியிலும், கூலக்கடை பஜார் மற்றும் அதை சுற்றியிருந்த பகுதிகளில் குடியிருந்தும், தொழில் செய்து வரும் நபர்கள் என்றும் அவர்களில் சிலர் எனது வாடிக்கையாளர்கள் என்றும், இருந்தபோதிலும் அவர்களை தெரியாது என வேண்டுமென்றே பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது மேற்சொன்ன சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**